செ.வெ.எண்:57 / ஜூலை /2020 நாள்: 18.07.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜமாபந்தி பசலி ஆண்டு 1429 (2019 – 2020) ஆம் ஆண்டுக்கான கோரிக்கை தொடர்பான மனுக்களை பொதுமக்கள் தாங்களாகவே https://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளம் அல்லது இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்வதற்கு 31.07.2020 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப.,அவர்கள் அறிவிப்பு.**

------

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் COVID – 19 தொற்றுநோய் பரவுதலை தடுத்தல் தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை (பல்வகை) எண்.306, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்: 17.06.2020-இன்படி, 1429 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) கிராமக் கணக்குகளில் நடவடிக்கை மேற்கொண்டு அதனை நிறைவு செய்திடவும் மற்றும் பொதுமக்களிடமிருந்து நேரடியாக வருவாய் தீர்வாய மனுக்கள் பெறப்படுதலை தவிர்த்து 29.06.2020 முதல் 15.07.2020 வரை வருவாய் தீர்வாயம் தொடர்பான மனுக்களை https://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணைய வழியில் விண்ணப்பித்து கொள்ள தெரிவிக்கப்பட்டது.

தற்போது 1429 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாய மனுக்கள் 31.07.2020 வரை பொதுமக்கள் இணைய வழியில் விண்ணப்பித்துக் கொள்ள கால நீட்டிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திருச்சிராப்பள்ளி**